**DECEMBER 2022** **U/ID 33210/URT2A/ URL2A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

1. வீணையின் உறைக்குப் பெயர் என்ன?

2. சேக்கிழார் எச்சோழனுக்கு அமைச்சராகப் பணியாற்றினார்?

3. முதல் வரகுணபாண்டியன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்?

4. பாண்டிய நாட்டைப் பற்றி எழுதிய வெனிஸ் நாட்டு வழிப்போக்கன் யார்?

5. அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் யார்?

6. பட்டடை முலாயம் என்றால் என்ன?

7. 'மதுரை விசயம்' எனும் நூல் யார் எம்மொழியில் எழுதினார்?

8. பிரான்சிஸ் சேவியர் தென்பாண்டி நாட்டுக்குச் செய்த செயல்களை எழுதுக.

9. விசயநகர வீழ்ச்சிக்குக் காரணமான போர் எது?

10. டேனிஷ்காரர்களின் தொழிற்சாலை தமிழகத்தில் எங்கு எப்போது தொடங்கியது?

11. விடுதலைக்குப் பின் இந்திய துணி உற்பத்தி பற்றி குறிப்பு வரைக.

12. போர்ச்சுகீசிய மாலுமி யார்? இவர் வந்தடைந்த இடம் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.

13. சோழர்கால வாணிப நிலையை எழுதுக.

14. சடையவர்ம சுந்தரபாண்டியனின் ஆட்சிநிலையை விளக்குக.

15. மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சி சிறப்பை எழுதுக.

16. பதிமூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சமயம் பற்றி எழுதுக.

17. செஞ்சிநாயக்கரின் திருப்பணிகளை எழுதுக.

18. மங்கம்மாள் அரசாட்சி மேற்கொண்ட நிலையை விளக்குக.

19. போர்ச்சுக்கீசியர் வருகையால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. சோழர்கால இலக்கிய வளர்ச்சியை ஆராய்க.

21. பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சியும் வீழ்ச்சியும் குறித்து கட்டுரைக்க.

22. பதிமூன்றாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமுதாய நிலையைக் கட்டுரைக்க.

23. மதுரை நாயக்கரின் ஆட்சி நிலையை விவரிக்க.

24. விடுதலைக்குப்பின் தமிழகத்தின் நிலையை எழுதுக.

———————